புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **29 ஏப்ரல், 2021**

## பத்திரிகை செய்தி

புதுச்சேரியில் கொரோனா மேலாண்மை குறித்து துணைநிலை ஆளுநர் மாளிகையில் நடைபெறும் வாராந்திரக் கூட்டம் இன்று (29-04-2021) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் தலைமை வகித்தார். தனியார் மருத்துவக் கல்லூரிகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகளின் உள்கட்டமைப்பு, வெண்டிலேட்டர் கருவிகள், பிராணவாயு, மருந்து இருப்பு, படுக்கை வசதி, மருத்துவர்கள்-செவிலியர்களின் எண்ணிக்கை ஆகியவை பற்றி கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

கூட்டத்தில பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

- சுகாதாரப் பணியாளர்கள், முன்களப் பணியாளர்கள், பொது மக்கள் இரண்டாவது தவனை தடுப்பூசி போடுவதை உறுதி செய்ய வேண்டும்.
- எதிர்வரும் நாட்களில் தொற்று அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக மருத்துவ அறிஞர்கள் உத்தேசித்திருப்பதை கருத்தில் கொண்டு இப்போது இருக்கின்ற மனித வளத்தை உடனடியாக அதிகப்படுத்த வேண்டும். வரும் சூழலை எதிர்கொளவதற்குத் தயாராக அவர்களுக்கு பயிச்சி அளிக்க வேண்டும்.
- மாநிலம் முழுவதும் மருத்துவத் துறையில் இருக்கின்ற மனித வளத்தை ஒருங்கிணைக்க வேண்டும். இறுதியாண்டு மருத்தவ, செவிலிய மாணவர்களை கொரோனா மேலாண்மைப்பணியில் ஈடுபடுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய வேண்டும்.
- மருத்துவமனைகளில், வெண்டிலேட்டர் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்கள் பழுதடையும் நிலையில் அவற்றை உடனடியாக சரிசெய்வதற்கான தொழில்நுட்ப குழு அல்லது மருத்துவத் தொழில்நுட்பம் அறிந்தவர்களை ஒருங்கிணைக்க வேண்டும். அதற்கான ஏற்பாடுகளை உடனடியாக தொடங்க வேண்டும்.
- அவசர காலத் தேவை கருதி உடனடியாக தனியார் மருத்துவக் கல்லூரிகளில் உள்ள அவசர சிகிச்சைப் பிரிவுகளின் உள்கட்டமைப்பை மேம்படுத்த வேண்டும். அவசரத் தேவைக்காக, முடிந்த அளவு ரெம்டெசிவிர் மருந்து கையிருப்பில் வைக்க வேண்டும்.
- ரெம்டெசிவிர் மருந்து வெளியில் எளிதாக கிடைக்கவில்லை. மருத்துவர்களும் இதனை உணர்ந்து செயல்பட வேண்டும். மக்களை பரிதவிப்பில் விடக்கூடாது. ரெம்டெசிவிர் மருந்து பற்றிய மாயையை மாற்ற வேண்டும்.

- கொரோனா பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனைகளுக்குக் கொண்டு செல்ல தனியான வாகனங்கள் பயன்படுத்த வேண்டும். அவர்களது சொந்த வாகனங்களில் செல்வதை தடுக்க செய்ய வேண்டும். தேவைகேற்ப வாகனங்களை ஏற்பாடு செய்ய வேண்டும்.
- கொரோனா நோயாளிகளின் தொடர்பில் இருந்தவர்கள், கொரோனா பாதிப்பின் அறிகுறி உள்ளவர்கள் தொற்றைப் பரப்பாமல் இருக்க அவர்களே தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் முகக்கவசம் போன்ற தடுப்பு சாதனங்களை வழங்க ஏற்பாடு செய்ய் வேண்டும்.
- பரிசோதனைக்கு வருபவர்கள் மாதிரிகள் அளித்தபின் முடிவுகள் வரும்வரை தனிமைப்படுத்திக் கொள்ளுவதை உறுதிப்படுத்த வேண்டும். அவர்கள் வைரஸ் கிருமிகளைப் பரப்புவதைத் முடிந்தவரை தடுக்க வேண்டும். அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
- இந்திராகாந்தி அரசு மருத்துவமனைக்கு வரும் கொரோனா தொற்று உள்ளவர்கள் கூட்டம் சேருவதைத் தவிர்க்க வேண்டும். மருத்துவமனையில் அனுமதிக்கும் முன்பு அவர்களை தனியாக தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும்.

கூட்டத்தில், துணைநிலை ஆளுநரின் ஆலோசகர்கள் டாக்டர் C. சந்திரமௌலி, டாக்டர் A. P மகேஸ்வரி, தலைமைச் செயலர்திரு அஸ்வனி குமார், சுகாதாரத்துறைச் செயலர் திரு அருண், நலத்துறைச் செயலர் திரு உதய்குமார், உள்ளாட்சித்துறைச் செயலர் திரு வல்லவன், துணைநிலை ஆளுநரின் செயலர் திரு அபிஜித் விஜய் சௌதிரி, சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் மோகன் குமார், மாநில சுகாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு ஸ்ரீராமலு, ஜிப்மர் மருத்துவமனையின் இயக்குநர் டாக்டர் ராகேஷ் அகர்வால், இந்திராகாந்தி அரசு மருத்துவக் கல்லூரியின் இயக்குநர் டாக்டர் உதயசங்கர், அனைத்து தனியார் மருத்துவமனைகளின் இயக்குநர்கள் மற்றும் மருத்துவ அதிகாரிகள் கலந்து கொண்டனர்.